# களனிப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்திய பதவியணியினரிற்காக பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் 1 தொடக்கம் 4 ஆண்டுகள் வரை சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருந்த மூன்று உத்தியோகத்தர்களிற்காக ரூபா 115,000 ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட பிரசுரங்களின் இருப்பு மீதியினைக் காட்டிலும் 12 பிரசுரங்களின் 477 நூல்கள் மிகையாகவும் ஒரு பிரசுரத்தின் 162 நூல்கள் பற்றாக்குறையாகவும் கொண்டு இருப்பினைக் கணிப்பீடு செய்திருந்தமை காரணமாக இருப்பின் பெறுமதி ரூபா 113,420 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான பேரேட்டின் நுகர்வுப் பொருள் இருப்புக் கணக்கின் மீதி ரூபா 456,250 ஆன போதிலும் அத்திகதியில் பௌதீக இருப்பின் பெறுமதி ரூபா 271,196 ஆக காணப்பட்டது. அதன்படி நுகர்வுப் பொருள் இருப்பு ரூபா 185,059 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகளிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு மீதியானது நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 431,614 ஆன போதிலும் பட்டோலையின் படி ரூபா 387,043 காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 44,571 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 396 | ரூபா 23,684 பெறுமதியான இரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 756 | 2011 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (அ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவுச் | கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரித்து அதன் படி கொள்வனவுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் |

| | |
|---|---|
| சுற்றறிக்கையின் 04 ஆம் அத்தியாயம் | திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 799,814 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும், ரூபா 197,242 பெறுமதியான நூலகப் புத்தகங்களும் ரூபா 1,186,764 பெறுமதியான நுகர்வுப் பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) 2011 ஏப்ரல் 04 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 2011 ஜனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை ஆராய்ச்சிப் படியினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை கொண்ட உத்தியோகத்தர்களினால் ஆராய்ச்சயிள் தன்மை, கால எல்லை மற்றும் முறைகளை உள்ளடக்கிய ஆராய்ச்சி பிரேரணையொன்றை ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகரித்துக் கொள்ளாது நிறுவகத்தின் 04 பதவியணியினரிற்கு மீளாய்வாண்டில் ஆராய்ச்சிப் படியாக ரூபா 554,190 செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 6,633,488 பற்றாக் குறையொன்றானதுடன் அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 4,164,831 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு கிடைத்திருந்த ரூபா. 7,314,146 ஆன அரசாங்க மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா. 680,658 மிகையாகியிருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 7,900,000 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,735,169 மிகையாகியிருந்தது. சம்பளங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினம் அதிகரித்திருந்தமையும் பாடநெறி வருமானங்கள் குறைவடைந்திருந்தமையுமே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மிகை ரூபா 3,054,511 ஆல் குறைவடைந்திருந்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

கல்விச் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாணவர்களைப் பதிவுசெய்தல்

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மாணவர்களைப் பதிவுசெய்தலில் 16.8% ஒட்டுமொத்த அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் பௌத ஆயுர்வேத மதியுரை கலைமானி (சிங்களம்), பௌத கற்கைகள் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்களம்) மற்றும் பௌத கற்கைகள் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (ஆங்கிலம்) பாடநெறிகளிற்கான மாணவர் பதிவுகளில் முறையே 51.7%, 27.7% மற்றும் 25% குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டளவில் நிறுவகம் 7 ஒரு நாள் பாடநெறிகளை நடாத்தியிருந்த போதிலும் அவற்றில் பௌத கற்கைகள் கலைமானி சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் இரண்டிற்கே மாணவர்களின் பங்களிப்பு கூடுதலாக கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இந்தப் பாடநெறி இரண்டிற்குமான மாணவர் பதிவு மீளாய்வாண்டிற்கான மொத்த மாணவர் பதிவில் 71.4% ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அது 66% ஆக காணப்பட்டது.

(iii) நிறுவகம் இரண்டாண்டு பௌத கற்கைகள் தத்துவமானி சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடநெறிகளை நடாத்துவதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிங்களப் பாடநெறிக்கான மாணவர் பதிவு 7.8% இனால் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலப் பாடநெறிக்கான மாணவர் பதிவு 42.8% இனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) பரீட்சைகளிற்கு தோற்றுதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள்

(i) நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற 07 ஓராண்டு பாடநெறிகளிற்கு மீளாய்வாண்டில் ஒட்டு மொத்தமாக பதிவுசெய்யப்பட்டிருந்த

மாணவர்களின் எண்ணிக்கை 470 ஆக காணப்பட்ட போதிலும் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 398 ஆக காணப்பட்டமையால் 72 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருக்கவில்லை.

(ii) பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் திகதி நிறுவகத்தினால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 2012 மே 22 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுபேறுகளை வெளியிடுதல் 40 நாட்கள் அளவில் தாமதம் செய்யப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

ஈ.டபள்யூ குணதிலக நிதியத்திற்கு 1984 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 15,000 தொகையும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட்டிருந்த ரூபா 176,798 வட்டியும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களித்தன்மையும் நல்லாட்சியும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி∴12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2010 – 2015 காலப்பகுதிக்காக குறித்துரைத்த விடயங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களை ஒப்பிடுகையில் 42% இலிருந்து 93% வரையான வீச்சளவில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முற்பணங்களைத் தீர்த்தல்

(ஆ) கணக்கீடு

(இ) பிரசுர இருப்புக்களைப் பேணிச்செல்லல்

(ஈ) ஆராய்ச்சிப் படிகள்